පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 79

ආයතනයේ නම : දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, මඩකලපුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ **ගරු අමාත්‍යවරයාගේ** නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற அமர்வு இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு.

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற்கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் **கௌரவ அமைச்சரின்** அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Publication Series No: 79

Name of the Institution: District Secretariat, Batticaloa.

Submission of observations of **Hon. Minister** and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

பாராளுமன்றத்தில் பொது கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற்கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற அமர்வு இலக்கம் : 79

மாவட்டச் செயலகத்தின் பெயர் : மட்டக்களப்பு.

பொது கணக்குக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளும் வழிகாட்டலும்	கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில் கிடைக்கப்பெறவில்லை உள்ளகக் கணக்காய்வு ஐயவினா அறிக்கைகளின் பிரதி நிதி ஒழுங்குவிதி 134(3) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. வாகனங்களின் தினசரி ஓட்டப்பதிவு மற்றும் மாதாந்த ஓட்டப்பதிவுகளின் பொழிப்பு கிரமமான முறையின் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்படவில்லை. சகல வாகனங்களின் தினசரி குறிப்புப் புத்தகம் திகதி அடிப்படையில் பேணப்படவில்லை.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்படும் கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்தினுள் பதிலளிக்கப்படுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வு ஐயவினா அறிக்கைகளின் பிரதி நிதி ஒழுங்குவிதி 134(3) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாகனங்களின் தினசரி ஓட்டப்பதிவு மற்றும் மாதாந்த ஓட்டப்பதிவுகளின் பொழிப்பு கிரமமான முறையின் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்படுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சகல வாகனங்களின் தினசரி குறிப்புப் புத்தகம் திகதி அடிப்படையில் பேணப்படுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் மறுதலித்த அபிப்பிராயமாக அல்லது பாதகமான அபிப்பிராயமாக காணப்பட்டது.	எதிர்காலத்தில் தகுதிவாய்ந்த அபிப்பிராயத்தினை தெளிவான அபிப்பிராயமாக அடைவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
மட்டக்களப்பு.

Mrs.J.J.Muraleetharan
Government Agent & District Secretary
Batticaloa.

கணக்காளர்,
மாவட்டச் செயலகம்,
மட்டக்களப்பு.

M. VINOTH
Accountant
District Secretariat
Batticaloa.

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்